**சுருக்கம்**

பணியாளரமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – பழனி பதிவு மாவட்டம் – திரு.ஆர்.ராகுல் என்பவருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b)–ஐத் தளர்த்தி கருணையடிப்படையில் 20.12.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு(கே)த்துறை**

அரசாணை (4ப) எண். 5

நாள் : 14.01.2020
விகாரி, மார்கழி, 29,
திருவள்ளுவர் ஆண்டு, 2050
படிக்கப்பட்டது :

பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண். 39470/கே2/2016, நாள் 05.04.2019.

*****

**ஆணை:**

பதிவுத்துறையில் திண்டுக்கல் பதிவு மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தினிடையே 03.02.2013 அன்று மரணமடைந்த நா.இராதாகிருஷ்ணன் என்பவரின் மனைவி திருமதி.R.பேபி என்பவர் தமது மகன் திரு.ஆர்.ராகுல் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 02.08.2016 அன்று மனு அளித்தார். அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி திரு.ஆர்.ராகுல் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வித் தகுதிகளை மட்டும் பெற்றிருந்தபடியால், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b)–ஐத் தளர்த்தி அரசளவில் ஆணை பெற்று அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பழனி பதிவு மாவட்டத்தில் பணிநியமனம் வழங்கியுள்ளார். தனியர் 20.12.2017 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அவரது தற்காலிகப் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறைத் தலைவரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, திரு.ஆர்.ராகுல் என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச கல்வித்தகுதியான அதாவது இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதி செய்யப்படுகிறது.

3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எம்)துறை, நாள் 01.08.2018–ன்படி இந்நேர்வு குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், பதிவுத்துறைத் தலைவரின் பரிந்துரையை ஏற்று, பதிவுத்துறையில் திண்டுக்கல் பதிவு மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தினிடையே 03.02.2013 அன்று மரணமடைந்த நா.இராதாகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.ஆர்.ராகுல் என்பவர் கருணையடிப்படையிலான பணி நியமனம் செய்யப்பட்ட நாளன்று தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில், பழனி பதிவு மாவட்டத்தில் அவர் பணியில் சேர்ந்த நாளான 20.12.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற்றிட விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.25228/ட்டி1/2019–1, நாள் 31.12.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.102/ஜி2/2020, நாள் 08.01.2020 ஆகியவற்றில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. பாலச்சந்திரன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
திரு.ஆர்.ராகுல், இளநிலை உதவியாளர்,
பழனி பதிவு மாவட்டம்
(பதிவுத்துறைத் தலைவர் வழியாக)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28.(இ)
மாநிலக்கணக்காயர், சென்னை–18
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்
(பதிவுத்துறைத் தலைவர் வழியாக)
நகல்:
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ட்டி1)துறை, சென்னை – 9
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

20/1/2020
பிரிவு அலுவலர்
20.1.2020